**JAGDISH ASTROLOGER**
Chennai
Cell : 9884292394
www.jagdishastrologer.com

**Predictions, Birthstones, Counseling**
**Sarpa Dosham, Graha Dosha Pariharam,**
**Horoscope Matching for Marriage.**

**10-05-2025**

# குரு வணக்கம்

**குணமிகு வியாழ குரு பகவானே**
**மனமுடன் வாழ மகிழ்வுடன் அருள்வாயே!**
**பிரகஸ்பதி வியாழப் பரகுரு நேசா**
**கிரக தோஷமின்றி காத்தருள்வாயே!**



# குரு பெயர்ச்சி / (Guru Peyarchi) பலன்கள்

## வாக்கிய பஞ்சாங்கத்தின் படி

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான விசுவாவசு வருடம்

சித்திரை மாதம் 28 ம் தேதி **(11.05.2025)**

ஞாயிற்றுக்கிழமை சுவாதி நட்சத்திரம், சதுர்தசி திதி

சித்தயோகம் கூடிய சுபதினத்தில் அன்று மதியம் 1.19 மணிக்கு,

**குரு பகவான்**

ரிஷப ராசியிலிருந்து, மிதுன ராசிக்கு பெயர்ச்சி அடைகின்றார்.

**According to "Vakkiya Panchangam"**

**Planet Guru Bhagvan (Jupiter) is going to transit on 11-05-2025, Sunday from Rishaba Rasi (Taurus) to Mithuna Rasi (Gemini) at 01:19 P.M.**

## திருக்கணித பஞ்சாங்கத்தின் படி

குரு பெயர்ச்சி திருகணித பஞ்சாங்கத்தின்படி புதன்கிழமை (14. 05. 2025) இரவு 10:36 P.M மணியளவில், ரிஷப ராசியில் இருந்து மிதுன ராசிக்கு இடப்பெயர்ச்சி ஆகிறார். குரு பகவான் 02/6/2026 வரை மிதுன ராசியில் இருப்பார்.

சப்த ரிஷிகளில் ஒருவரான ஆங்கீரிச மகரிஷியின் புதல்வரே குரு. இறைவனின் மறு உருவம் என்றும், நவகிரகங்களில் சாத்வீகம் மற்றும் தெய்வாம்சம் குணம் பொருந்திய சுப கிரகமாக கருதப்படுவது இந்த குருவே ஆகும். அதனால் தான் நாம் இவரை "தேவ குரு" என்கிறோம். இது முழு சுபக்கிரகம் ஆகும். பொன்னவன் -பிரஹஸ்பதி - தனகாரகன் என்றும் அழைக்கப்படுவர். "குரு பார்க்கின் கோடி நன்மை - கோடி புண்ணியம்" என்பார்கள்.

இந்த குரு கிரகம் புனித ஸ்தலங்கள், கோவில்கள், நீதி மன்றங்கள், கல்வி சாலைகள், வங்கிகள், கருவூலம் மற்றும் அதிக பணப்புழக்கம் உள்ள இடங்களில் இந்த கிரகம் வாசம் புரியும்.

அருட்செல்வம், பொருட்செல்வம் மற்றும் மழலை செல்வத்தை தந்து அருளும் உன்னதமான சுப கிரகம்.
ஒருவரின் ராசிக்கு, குரு 2, 5, 7, 9, 11 ம் இடத்துக்கு வரும் பொழுது, குரு பலம் உண்டாகிறது. இந்த குரு பலம் தான் திருமணம் போன்ற அனைத்து சுப காரியங்களுக்கு அவசியமாகும்.
இந்த கிரகம், ஒரு ராசியிலிருந்து அடுத்த ராசிக்கு செல்ல ஒரு வருடம் ஆகிறது. இதையே நாம் குரு பெயர்ச்சி என்கிறோம்
இந்த குரு பெயர்ச்சி பலன்கள் பொது பலனே ஆகும்.
இவர் தன்னை நாடி மனமுவந்து வழிபடுவோருக்கு, தனயோகம், உயர்ந்த வாழ்க்கை, மனமகிழ்ச்சி, சொந்த வீடு அமையும் யோகம், சுப காரியங்கள், திருமண யோகம், புத்திர பாக்கியம், உயர் பதவி, நிறைந்த செல்வம், செல்வாக்கு, சமூக அந்தஸ்து, மற்றும் பணிவு, இரக்கம், நேர்மை, நியாயம், தர்மம், சத்தியம், பெருந்தன்மை போன்ற உயர்ந்த நற்குணங்களையும் மற்றும் ஆன்மீக ஈடுபாட்டை தருபவர்.

தற்போது குரு மிதுன ராசிக்கு செல்கிறார். மிதுன ராசி என்பது குருவுக்கு பகை வீடாகும். இதனால் குருவினால் உண்டாகும் நன்மைகள் பாதிக்கும் என்பதை நினைவில் கொள்ளவும்.
ஒருவரின் ஜாதகத்தில் நடக்கும் தசா- புத்தியின் பலனே அதிகம் நடக்கும், இந்த குரு பெயர்ச்சி பலன் ஒருவரின் ஜாதக பலனின் நன்மை - தீமைக்கு உறுதுணையாக மட்டுமே இருக்கும்.

## ஒவ்வொரு ராசிகளும் எந்தவித பலன்களை அடைகிறார்கள் என்பதை பார்ப்போம்:

### குருவால் அதிக நன்மை அடையும் ராசிகள்:
### Out of 12 Rashis the most benefitting Rashis are:
### (90% positive) குரு பலம்

**ரிஷபம் - Rishabam [Taurus] - 2 ம் இடம்**

[ தனம், வாக்கு, குடும்பம், பொருளாதாரம்]

**கும்பம் - Kumbam [Aquarius] - 5 ம் இடம்**

[ பூர்வ புண்ணியம், புத்திர ஸ்தானம், எதிர்காலம், அறிவு திறன், எதிர்பாராத யோகம்]

**தனுசு - Dhanus [Sagittarius] - 7 ம் இடம்**

[ திருமணம், தொழில், சுப பலன், சௌபாக்கியம்]

**துலாம் - Thulam [Libra] - 9 ம் இடம்**

[ அதிர்ஷ்டம், பாக்கியம், புண்ணியம், செல்வம், யோகம்]

**சிம்மம் - Simmam [Leo] - 11 ம் இடம்**

[லாபம், வெற்றி, வசதி, முன்னேற்றம்]

### குருவால் சுமாரான நற்பலன் அடையும் ராசிகள்:
### Rashis, which gets moderate benefit:
### (50% Positive) பாதி நன்மை

**மிதுனம் - Mithunam [Gemini] - 1 ம் இடம்**

[ஜென்ம குரு, உடல்நலம், உடல் வலிமை, பொது நலன்]

**மீனம் - Meenam [Pisces] - 4 ம் இடம்**

[வீடு, வாகனம், பூமி, செல்வம், சுகம், சந்தோஷம்]

## குருவால் மிதமாக கெடுதல் அடையும் ராசிகள்:
## Rashis, which gets affected moderately:
## (60% Negative – 60% கெடுதல்)

**மேஷம் - Mesham [Aries]** - 3 ம் இடம்
[முயற்சி, திறமை, துணிவு, மனோபலம்]

**கன்னி - Kanni [Virgo]** - 10 ம் இடம்
[ வேலை, தொழில், வருவாய், கடமை]

********

## குருவால் கடுமையாக பாதிப்பு அடையும் ராசிகள்:
## Rashis, which gets affected severely:
## (80% Negative - 80% கெடுதல்)

**மகரம் - Makaram [Capricorn]** - 6 ம் இடம்
[வியாதி, கடன், கஷ்டம், பகை, விரோதம்]

**விருச்சிகம் - Vruchikam [Scorpio]** - 8 ம் இடம்
[ வலி, வேதனை, வியாதி, போராட்டம், வம்பு, வழக்கு]

**கடகம் - Kadakam [Cancer]** - 12 ம் இடம்
[ நஷ்டம், செலவுகள், விரயம், மருத்துவ செலவு]

*************

## மேஷம்: (அசுவினி, பரணி, கார்த்திகை -1 ம் பாதம்)

மேஷ ராசி அன்பர்களுக்கு, குரு பகவான் தங்கள் ராசிக்கு, 3 ம் இடத்திற்க்கு வருகிறார். இந்த இடம் பொதுவாக குருவுக்கு சாதகமான இடமாக கருதப்படுவதில்லை, ஆகையால், சில கடினாமான சூழ்நிலையை இந்த ஒரு வருடம் குரு தரலாம்.

3 ம் இடம், ஜோதிடத்தில் இளைய சகோதரரம், தைரியம், முயற்சி, தொடர்பு, குறுகிய பயணங்கள், முயற்சிகள், செயல் திறன், எழுத்து, தகவல் தொடர்பு மற்றும் அண்டை வீட்டார் ஆகியவற்றைக் குறிக்கிறது. குரு இந்த இடத்தில் இருக்கும்போது, இந்த பாவங்களை தொடர்புடைய விஷயங்களில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

3 ம் இடத்து குரு, சொந்தம் - பந்தம் மற்றும் நண்பர்களிடையே விரோதம் ஏற்படுத்தும். பண தட்டுப்பாடு தலைக்கு மேல் போகும். தேவைகளை சமாளிக்க கடன் வாங்கும் சூழ்நிலை உருவாகலாம். ஆரோக்கியமும் கெடும். வீண் அலைச்சல், காரிய தடைகள் அல்லது எடுக்கும் காரியங்கள் தாமதப்படுதல், வேலைக்கு உணவு கூட உண்ண முடியாமல் அலைந்து திரிய வைக்கும்.
எந்த காரியத்தில் ஈடுபட்டாலும், அதில் பல இடையூறுகள் வரும். கூட இருப்பவர்களே தங்களுக்கு பிரச்சினை தருபவர்களாக இருந்து விரோதிகளாக மாறுவார்கள்.

கடினமான வேலைகளை கையில் எடுத்துக் கொண்டு, அதை சரி வர செய்ய முடியாமல், காலத்தை வீணாக்க நேரிடும்.
புதிய முயற்சிகளை மேற்கொள்வதில் தயக்கம், பயம் அல்லது தடுமாற்றம் ஏற்படலாம். அதீத தன்னம்பிக்கை தந்து, சில முடிவுகள் அவசரப்பட்டு எடுக்க நேரும். இதனால் நிதி இழப்பு ஏற்படலாம்.
திடீர் எதிர்பாராத மாற்றங்கள் மற்றும் தொடர்ச்சியான அழுத்தம் காரணமாக மனநிலை மாறுபாடுகளால் செயல்திறன் குறையலாம்.

சிறு பயணங்கள் லாபம் அளிக்கும். வணிகம் அல்லது வேலைக்காகப் பயணித்தால் நல்ல முடிவுகள் தரலாம். கடின முயற்சியால், சில நன்மைகள் கிடைக்கும்.

## ரிஷபம்: (கார்த்திகை - 2, 3, 4 ம் பாதம், ரோகிணி, மிருகசிரிஷம் 1, 2ம் பாதம்)

ரிஷப ராசி அன்பர்களுக்கு, குரு பகவான் தங்கள் ராசிக்கு, **2 ம்** இடத்திற்க்கு வருகிறார். இது மிகவும் உன்னதமான இடமாக கருதப்படுகிறது. **இது குரு பலம் ஆகும்.**

கடந்த இரண்டு ஆண்டுகளில், சாதகமற்ற நிலையில் இருந்த உங்களுக்கு, அடுத்த ஒரு ஆண்டு குரு அள்ளி கொடுப்பார்.

**2 ம்** இடம், தனம் - வாக்கு, குடும்பம் - சம்பாதனை, செல்வம் மற்றும் பொருளாதர வளர்ச்சியை குறிக்கும்.

புதிய வருமான ஆதாரங்கள் உருவாகலாம், அல்லது ஏற்கனவே உள்ள வருமானம் அதிகரிக்கலாம். குறிப்பாக, வாக்கு - பேச்சால் சம்பாதிப்பவர்களுக்கு இது மிக ஏற்றமான காலம் ஆகும். உங்கள் பேச்சு மற்றவர்களை ஈர்ப்பதோடு, சமூகத்தில் நன்மதிப்பையும் தரும். தன யோகம் தரும், **பணம் பல வழியிலும் வரும்.** வசதி வாய்ப்பு உண்டாகி, குடும்பத்தில் நிம்மதியும், மகிழ்ச்சியும் நிலவும். பல வழியிலும் ஏற்றம் உண்டாகுவதுடன், மனதில் புது வித தெம்பும், உற்சாகமும், தன்னம்பிக்கையும் உண்டாகும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும், நீண்ட நாள் வியாதி குண்மாகும்.

சமூகத்தில் கௌரவம் அதிகரிக்கும். பொது ஜன தொடர்பு, பெரிய மனிதர்கள், பிரபலங்கள் நட்பு கிடைக்கும். நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும். **கையில் காசு தங்கும், சேமிப்புகள் உயரும்.**

குடும்பத்தில் மங்கள காரியங்கள், சுப நிகழ்ச்சிகள் நடக்கும். திருமண தடை நீங்கும். புத்திர பாக்கிய தடை நீங்கும்.

தொழில் ரீதியாக அபரித வளர்ச்சி உண்டாகும். எதிர்பாராத ஆதாயமும் வெற்றியும் கிடைக்க பெற்று மேலும் உங்கள் தொழிலை விஸ்தாரம் செய்து வளர்த்து கொள்வீர்கள்.

மாணவர்களுக்கு கல்வி - அறிவு வளர்ச்சி அடையும், எதிர்பார்த்த உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு, பதவி உயர்வும், அங்கீகாரமும், நல்ல பேரும், புகழும், பாராட்டும் கிடைக்கும்.

எதிர்பாராத ஆதாயமும், தன வரவும், வெற்றியும் கிடைக்கும். பொன் - பொருள் சேர்ந்த வண்ணம் இருக்கும். குடும்பம் மேன்மையடையும்.

## மிதுனம்: (மிருகஷிரிஷம் 3, 4ம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1, 2 ,3)

மிதுன ராசி அன்பர்களுக்கு, குரு பகவான் தங்கள் ராசிக்கு, **1 ம்** இடத்திற்க்கு வருகிறார். இது "ஜென்ம குரு" ஆகும். ஜென்ம ராசிக்கு குரு வருவது அவ்வளவு சிறப்பு என்று சொல்ல இயலாது.

கடந்த காலம் 12 ம் இடத்தில் இருந்த **விரய குரு** நிறைய வீண் பிரச்சினைகள், விரயங்கள், செலவுகள் கொடுத்து, கெடுத்தற்கு, சற்று தற்போது நல்ல இடத்திற்க்கு வந்து இருப்பது ஆறுதலான விஷயம்.

**1** ம் இடம் - உடல், பொருள், ஆரோக்கியம், சந்தோஷம் மற்றும் ஒருவரின் சுய வளர்ச்சியை குறிக்கும். இந்த கால கட்டத்தில் இதன் சார்ந்த நன்மை - தீமை, இரண்டும் கலந்தே நடக்கும்.

நிறைய எதிர்பார்ப்புகள் ஏமாற்றத்தை ஏற்படுத்தலாம். தன்னம்பிக்கை குறைவு, முடிவெடுக்கும் திறன் குறைவு போன்றவை ஏற்படலாம்.

**மன இறுக்கத்துடன் சாத்தியமற்ற இலக்குகளை நோக்கி அலைந்து, திரிய வேண்டி வரும்.** உடல்நலப் பிரச்சினைகள் மற்றும் மன அழுத்தம் (அ) மன உளைச்சல் போன்ற எதிர்மறை விளைவுகளையும் சந்திக்க நேரிடலாம். சிலருக்கு எதிர்பாராத செலவுகளால் பண நெருக்கடிகள் உண்டாகலாம்.

அனைவரும் தன்னை, தனித்து கை விடப்பட்டதாக ஒரு உணர்வும், அச்சமும், வீண்கவலையும், சோம்பலும், மனகசப்பும், வெறுப்பும் தரும்.

குடும்ப உறுப்பினர்களுடன் கருத்து வேறுபாடுகள் அல்லது தகராறுகள் ஏற்படலாம். உறவுகளில் புரிதல் உணர்வு குறையலாம்.

தொழிலில் முன்னேற்றம் அல்லது பதவி உயர்வு தாமதமாகலாம். புதிய வாய்ப்புகள் கிடைப்பதில் சிரமம் அல்லது வேலையில் சில தடைகள் ஏற்படலாம். உத்தியோகத்தில் பதவி உயர்வு அல்லது சம்பள உயர்வு போன்ற அங்கீகாரங்கள் சற்று தாமதமாகக் கிடைக்கலாம். எதிர்பார்த்த பணிகள் காலதாமதமாக நிறைவேறலாம்.

இந்த கால கட்டத்தில் சிலருக்கு சுய-மேம்பாட்டிற்கான வாழ்க்கையின் ஒரு புதிய திசையை நோக்கி பயணிக்க வாய்ப்பு வரலாம். குருவின் பார்வை பலத்தால், சிலருக்கு புதிய வாய்ப்புகள், தனிப்பட்ட மற்றும் தொழில்முறை வளர்ச்சி, மற்றும், எதிர்பாராத யோகங்கள் சில அதிர்ஷ்ட பலன்கள் கிடைக்கலாம்.

**கடகம்:** (புனர்பூசம் 4ம் பாதம், பூசம், ஆயில்யம்)

கடக ராசி நேயர்களுக்கு, குரு பகவான் தங்கள் ராசிக்கு, **12 ம்** இடத்திற்க்கு வருகிறார். **இது குருவுக்கு மிகுந்த கெட்ட இடமாகும்.**
பொதுவாக ஜோதிடப்படி, 12ம் இடம் என்பது, விரயம், செலவுகள், தனிமை, கஷ்டம், நஷ்டம், மற்றும் தோல்வியை குறிக்கும். வியாதிகளால் வரும் மருத்துவ செலவுகள், சில பிரச்சினைகளால் தண்டனை அல்லது அபராதம் செலுத்த நேரிடுதல், வாங்கிய கடனுக்கு அதிக வட்டி கட்ட வேண்டிய சூழல், எதிலும் செயல் படாமல் இருத்தல், தூக்கம் இன்மையால் தவித்தல், தனிமையில் வாழ்தல், வரும் எதிர்ப்புகளை சமாளிக்க முடியாமல் தவித்தல்.
விலைமதிப்புள்ள பொருட்களை திருட்டு அல்லது மோசடி மூலம் இழக்க நேரிடும். அனைத்து முதலீடும் நஷ்டத்தை நோக்கியே செல்லும்.

நற்பெயருக்கு களங்கம் வரலாம், சுய மரியாதை கெடலாம். குடும்ப உறுப்பினர்களுடன் தவறான புரிதல்கள் அல்லது வாக்குவாதங்கள், வீண் சண்டைகள் அவ்வப்போது ஏற்படலாம். பொறுமையுடன் நடந்து கொள்ளுங்கள்; கோபத்தை கட்டுப்படுத்தவும்.
வேலை செய்யும் இடங்களில் சக ஊழியர்களால் சங்கடங்கள் வரலாம், உழைப்புக்கு ஏற்ற ஊதியம் கிடைக்கது. சுயதொழில் செய்பவர்கள் முதலீடு தவிர்ப்பதுடன் தன்னிடம் வேலை செய்பவர்களிடம், கனிவாக இருப்பது அவசியம், நஷ்டமும், சட்ட சிக்கல்கள் வர வாய்ப்புண்டு.

வெளியூர்- வெளிநாடு சென்று வேலை செய்பவர்களுக்கு பாதிப்புகள் அதிகம் இருக்காது. வேலை அல்லது படிப்பிற்க்கு வெளிநாடு செல்ல நினைப்பவர்களுக்கு வாய்ப்பு தேடி வரும்.
உங்களில் மறைந்து இருந்த திறமையை வெளிபடுத்துவதற்கும், ஆழமான நுண்ணறிவுகளைப் பெறுவதற்கும் உங்களுக்கு வாய்ப்பு கிடைக்கும். தியானம், யோகா மற்றும் ஆன்மீக ஈடுபாடு போன்றவைகள் இந்த காலகட்டத்தில் மிகவும் நன்மை பயக்கும்.

பொதுவாக 12 ம் இடத்து குரு பல விதத்திலும் செலவுகள் தரும், சில சமயம் சுப விரயங்களாகவும், முக்கால்வாசி வீண் செலவுகளாகவும் இருக்கும். பணத்தை கையாளும் திறமை வேண்டும்.

**சிம்மம்:** (மகம், பூரம், உத்திரம் 1ம் பாதம்)

சிம்ம ராசி நேயர்களுக்கு, குரு பகவான் தங்கள் ராசிக்கு, **11 ம்** இடத்திற்க்கு வருகிறார். இது குரு பலம் ஆகும். கடந்த கால வேலை, தொழில் மற்றும் வருமான பிரச்சினைகள் மற்றும் பல விதமான வேதனைகள் - துன்பங்களிலிருந்து விடுபடலாம் என்பது, மிக ஆறுதலான விஷயம் ஆகும்.

**11** ம் இடம், லாபம், எதிர்பாராத தனயோகம், வருமானம் வரக்கூடிய வழிகள், வசதி, வெற்றி, செல்வம் மற்றும் நினைத்ததை அடைய கூடிய திறன் ஆகியவை ஜோதிடப்படி குறிப்படும் விஷயங்கள் ஆகும். அனைத்து வகையிலும் லாபமும், பேரதிர்ஷ்டமும் அடுத்த 1 ஆண்டு உங்களுக்கு காத்திருக்கிறது. சுய தொழில் புரிவோருக்கு, தொழில் ரீதியான வளர்ச்சி, தொழிலை விஸ்தாரம் செய்ய அல்லது புதிய வணிக ஒப்பந்தங்கள் செய்ய ஏற்ற காலம் ஆகும். வேலை செய்வோருக்கு, புதிய வேலை வாய்ப்புகள், பதவி உயர்வு அல்லது உங்கள் திறமைகளை வெளிப்படுத்தும் சந்தர்ப்பங்கள் கிடைக்கலாம். மேலதிகாரிகள் உங்கள் பணியை பாராட்டுவார்கள், மேலும் உங்கள் உழைப்புக்கு ஏற்ற ஊதியமும், நற்பெயரும் தானாக வரும்.

திருமணம் மற்றும் அனைத்து சுப மங்கள காரியங்கள் யாவும் இனிதாக நடக்கும். நினைப்பவை யாவும் இனிதாக நடக்கும். கடந்த கால முதலீடுகள் எதிர்பாராத லாபமாக மாற வாய்ப்புள்ளது. உங்களின் சமூக வாழ்க்கை இந்த காலகட்டத்தில் மேலும் விரிவடையும், மேலும் புதிய நட்புகள் மலரும். குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும், கணவன் - மனைவி ஒற்றுமை மேலோங்கும். சொந்தம் - நட்பு வழியில் ஆதரவு பெருகும். சமூகத்தில் உங்கள் அந்தஸ்து உயரும்.

மனதும், எண்ணமும், வாழ்க்கையும் நல்லதொரு மாற்றத்தை நோக்கியும், லாபத்தை நோக்கியும் செல்லும் இராஜயோக காலமாகும்

**கன்னி:** (உத்திரம் 2,3,4ம் பாதம், அஸ்தம், சித்திரை 1, 2 ம் பாதம்)

கன்னி ராசிக்கார்களுக்கு, குரு பகவான் தங்கள் ராசிக்கு, 9 ல் இருந்து 10 ம் இடத்திற்க்கு வருகிறார். இது சிறிது கெட்ட இடமாக கருதப்படுகிறது. 10 ல் குரு பதவி நாசம் - 10 ல் குரு வந்தால், அவன் பரதேசம் செல்லுவான் - 10 ல் குரு முக்கால்வாசி துன்பம் என்றும் சொல்லுவார்கள்.

10 ம் இடம் என்பது, வேலை - தொழில் - வருவாய், சமூக அந்தஸ்து, அங்கீகாரம், நிர்வாகதிறன் ஆகியவை குறிக்கும் இடமாகும். இந்த இடத்துக்கு குரு வருவதால் மேலே குறிப்பிட்ட யாவும் கெடும்.

வேலையில் திருப்தி இல்லையென்றால், தாமாகவே வேலையை மாற்றி கொள்ளுவது நல்லது, இல்லையேல், அசிங்கம் - அவமானபட்டு, வேலையில் இருந்து வெளியேற்றப்படுவீர்கள். சிலருக்கு பிடிக்காத துறையிலோ, அல்லது பிடிக்காத வெளியூரிலோ இடம் மாற்றம் வரலாம், ஏற்றுக் கொண்டுதான் ஆக வேண்டும். சிறிய தவறுகளும் விமர்சனங்களுக்கு வழிவகுக்கலாம். எப்படி இருந்தாலும், தற்போது இருக்கும் வேலையில் வெறுப்பும், பிரச்சினையும் வந்தே தீரும். மேலதிகாரிகளுடன் கருத்து வேறுபாடுகள் அல்லது பணியிடத்தில் எதிர்பாராத மாற்றங்கள் நிகழலாம்.

தொழில் செய்பவர்களுக்கு, பணமுடக்கம் உண்டாகி, தொழிலை கைவிடலாம், என்கிற மனநிலைக்கு வரலாம். சிலருக்கு வீண் சிரமங்கள், மற்றும் திருப்தியற்ற சூழ்நிலையும் உருவாகும். கடன்கள் அல்லது வரி பிரச்சினைகள் தலைகாட்டக்கூடும். உங்கள், தலைமை பண்பு, நிர்வாக திறன் கெட்டு, சுய மரியாதை கெடலாம்.

குடும்ப சூழல் நன்றாக இருக்கும். நண்பர்கள், உறவினர்கள் ஆதரவு உண்டு. தன வரவு இருக்கும், மகிழ்ச்சியும் நிம்மதியும் இருக்கும். உயர்கல்வி கற்பவர்களுக்கு நல்ல வாய்ப்பு அமையும். வெளியூர், வெளிநாடு சென்று கல்வி கற்கும் வாய்ப்பு அமையும்.

வீடு, வாகனம், மனை வாங்க நினைப்பவர்கள் சில சிரமங்களை தாண்டி வாங்கலாம். உங்கள் கடின உழைப்பு மற்றும் நேர்மையான அணுகுமுறை இந்த காலகட்டத்தில் பலனளிக்கும். இந்த நேரத்தில் உங்கள் திறன்களை மேம்படுத்தி, வரும் புதிய வாய்ப்புகளைப் பயன்படுத்த தயாராக இருங்கள்.

**துலாம்:** (சித்திரை 3,4ம் பாதம், சுவாதி, விசாகம் 1,2,3ம் பாதம்)

துலாம் ராசி அன்பர்களுக்கு, குரு பகவான் தங்கள் ராசிக்கு 8 ல் இருந்து 9ம் இடத்திற்க்கு வருகிறார். இது குருவுக்கு மிக சிறந்த இடமாக கருதப்படுகிறது. இது குரு பலம் ஆகும்.
கடந்த 1 வருடம் 8ல் இருந்த குரு, வியாதியும், துன்பமும், வேதனையும், கஷ்ட நஷ்டத்தை தந்தார், நிறையவே அனுபவித்தீர்கள்.

தற்போது அதற்க்கு எதிர்மாறாக பெரும் அதிர்ஷ்டமும், யோக பலனும் குரு உங்களுக்கு அள்ளி தருவார். உங்கள் பேச்சு, நடவடிக்கைகள், உங்கள் செயல்பாடுகள், பயணம், சந்திப்புகள், யாவும் லாபமும், வெற்றியும் நோக்கியே அமையும்.

**9** ம் இடத்து குரு - அதிர்ஷ்டம், பாக்கியம், புண்ணியம், பொன்-பொருள் வசதி, செல்வம், யோகம் உயர்கல்வி, வெளிநாட்டு யோகம் ஆகிய விஷயங்களை இயல்பாகவே குரு பெருக்கி தருவார்.
வருமானம் பல வழியிலும் அதிகரிக்கும், வராது என்றிருந்த பணம் கைக்கு வரும். வசதிகள் பெருகும். லட்சுமி கடாட்ஷம் கிடைக்கும்.
திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் கைகூடும். வீட்டில் சுப நிகழ்ச்சிகள், மங்கள காரியங்கள் நடக்கும். வீடு - மனை வாங்க வாய்ப்பு வரும். வாடகை வீட்டில் இருப்போர் சொந்த வீட்டில் குடியேறும் வாய்ப்பு உண்டாகும்.
தொலைதூர பயணங்கள் மேற்கொள்ளும் வாய்ப்புகள் அதிகரிக்கும், மேலும் அவை பயனுள்ளதாகவும் இருக்கும்.

இதுவரை ஒதுங்கி வாழ்ந்தவர்கள் வெளிச்சத்திற்கு வருவார்கள், எங்கு சென்றாலும் முதல் மரியாதை கிடைக்கும். தந்தைவழி சொத்துகள் வந்து சேரும். கடந்த கால முதலீடுகள் லாபம் தரும்.
பிரிந்திருந்த குடும்பங்கள் ஒன்று சேர்வார்கள், எதிர்ப்புகள் விலகும், கோர்ட் வழக்குகளில் சாதகமான தீர்ப்பு கிடைக்கும்.
வெளிநாட்டு தொடர்புகள் மேம்படும், மேலும் வெளிநாடுகளில் வேலை அல்லது கல்வி வாய்ப்புகள் கிடைக்கலாம்.
ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும், புண்ணிய ஸ்தலங்கள் செல்ல வாய்ப்புகள் அமையும். தான தருமங்கள் அதிகம் செய்வீர்கள்.

இனி உங்களுக்கு அடுத்த 1 வருடத்திற்க்கு யாவும் ஜெயமே!!

## விருச்சிகம்: (விசாகம் 4ம் பாதம், அனுஷம், கேட்டை)

விருச்சிகம் ராசி அன்பர்களுக்கு, குரு பகவான் தங்கள் ராசிக்கு, 8ம் இடத்திற்க்கு வருகிறார்.

**கவலை, கஷ்டம், வீண் சண்டை - சச்சரவுகள், வலி, வியாதி, வேதனை, தொல்லைகள், வம்பு - வழக்கு, தோல்வி, அவமானம் - கெட்ட பெயர், விபத்து மற்றும் எதிர் பாராத மாற்றங்கள் ஆகியவைகளை குறிப்பது இந்த 8 ம் வீடாகும்.**

சண்டை சச்சரவுகள், வீண் விரோதம் ஏற்படும். பல வழிகளிலும் பிரச்சினைகள் வந்து கொண்டே இருக்கும். ஒரு சிலருக்கு வம்பு - வழக்கு விவகாரங்கள் ஏற்பட்டு வீண் சங்கடத்தை தரும். வாக்கு - பேச்சில் மிகுந்த கவனம் தேவை.

பிரயாணத்தில் சங்கடம் நேரிடும். தேவையற்ற பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. ஒருவேளை பயணம் செய்ய நேர்ந்தால், உடைமைகளையும், உடல் நலத்தையும் பத்திரமாக கவனித்துக் கொள்ளவும்.

மனம் கவலையும், குழப்பமும் இருந்து கொண்டே இருக்கும். நண்பர்கள், சொந்தம் பந்தம் யாவும் பகையாகும். சுயமரியாதை கெட்டு அவமானப்பட வேண்டி வரும், ஒதுங்கி இருப்பதே நல்லது.

குடும்பத்தில் நோயின் ஆட்சி பரவும், இதனால் மருத்துவ செலவும் மேலோங்கும். உணவு விஷயத்தில் அக்கறை தேவை.

உங்கள் முயற்சிகள் எதுவாகினும் தடைகள் அல்லது தாமதங்கள் ஏற்படலாம். எந்த ஒரு காரியத்தையும் எளிதாக முடிக்க முடியாது. கடின உழைப்பு தேவைப்படும். இதனால் மன அழுத்தம் வரலாம்.

வேலை செய்பவர்களுக்கு தன்னிலையை தாழ்த்தி கடுமையாக உழைத்தல் அல்லது வேலைச்சுமை அதிகரிப்பு, அல்லது விரும்பத்தகாத இடமாற்றம் ஏற்படலாம். வியாபாரம் செய்பவர்களுக்கு போட்டிகள் அதிகரிக்கலாம் அல்லது எதிர்பார்த்த லாபம் கிடைக்காமல் போகலாம்.பண நெருக்கடிகள் வரலாம்.முதலீடுகளில் கவனம் தேவை. எதிர்பாராத செலவுகள் ஏற்படலாம். யாருக்கும் பெரிய தொகையை கடனாக கொடுப்பதோ அல்லது வாங்குவதோ தவிர்க்கவும்.

**உழைப்பும், நேர்மையும், கடவுள் பக்தியும் கை கொடுக்கும்!**

## தனுசு: (மூலம், பூராடம், உத்திராடம் -1)

தனுசு ராசி அன்பர்களுக்கு, குரு பகவான் தங்கள் ராசிக்கு, 7 ம் இடத்திற்க்கு வருகிறார். இது மிகுந்த நல்ல இடமாக கருதப்படுகிறது. இது குரு பலம் ஆகும்.

இந்த குரு சமசப்தமாக உங்கள் ராசியை பார்ப்பதனால், மிகுந்த சுபத்துவமாக கருதப்படுகிறது. வாழ்க்கையில் முன்னேற புதிய வாய்ப்புகள் வரும். நீண்ட நாள் லட்சியம் நிறைவேறும்.
வாழ்வில் ஒரு பிடிப்பும், தன்னம்பிகையும், மனநிறைவும் கிடைக்கும்,
நீண்ட கால திருமண தடை நீங்கும். திருமணம் செய்துகொள்ள திட்டமிட்டவர்களுக்கு இந்த காலகட்டம் மிகவும் சாதகமானது ஆகும்.
வேலையில் பதவி உயர்வு, கல்வி அல்லது வேலைக்காக வெளிநாடு செல்லுதல், சொந்தமாக புதிய தொழில் தொடங்க, புது மனை வாங்க, மற்றும் சொந்த வீடு கட்ட - வாங்க, புதிய வாகனம் அமைய, மற்றும் அனைத்து சுப காரியங்களுக்கும் இந்த குரு பலம் மிக உதவியாக இருக்கும்.
கூட்டு வணிகத்தில் லாபம் கிடைக்கும். வணிகத்தில் உள்ளவர்களுக்கு புதிய சந்தைகள் அல்லது வாடிக்கையாளர்கள் மூலம் வருமானம் அதிகரிக்கலாம். புதிய கடன் அல்லது முதலீட்டு வாய்ப்புகள் வரும்.

குரு தன் 5ம் பார்வையாக தங்கள் ராசிக்கு 11ம் வீடான லாப ஸ்தானத்தை பார்ப்பதால், பல வழியிலும் லாபமும், வெற்றியும் உண்டாகும். தங்கள் வசதிகளை பெருக்கி கொள்ள வாய்ப்பு அமையும்.
எதிர்பாராத ஆதாயமும் வெற்றியும் கிடைக்கும். செல்வம் - செல்வாக்கு அதிகரிக்கும். உங்கள் ஆசைகள் யாவும் நிறைவேறும். உங்கள் பேச்சில் - செயல்பாடுகளில் மற்றும் எடுக்கும் முடிவுகளில் ஞானம் மற்றும் முதிர்ச்சி காணப்படும்.
சமூகத்தில் மரியாதை மற்றும் புகழ் அதிகரிக்கும். வாழ்வில் ஒரு பிடிப்பும், சுவாராசியமும் உண்டாகும். வாழ்க்கை தரம் உயரும். வீடு - மனை பூமியோகம் ஏற்படும்.

உங்கள் ராசியின் அதிபதியே குரு ஆவதால் உங்களின் ஆழமான மனதில் இருக்கும் கனவும், லட்சியமும் அடைவதற்கு அடித்தளம் போடும் காலம் இதுவே.

**மகரம்:** **(உத்திராடம் -2,3,4 ம் பாதம், திருவோணம், அவிட்டம் 1,2 ம் பாதம்)**

மகர ராசி அன்பர்களுக்கு, குரு பகவான் தங்கள் ராசிக்கு, **6 ம்** இடத்திற்க்கு வருகிறார். இந்த இடம் பொதுவாக உகந்த இடம் அல்ல. **6ம் இடம்,** நாம் சந்திக்கும் அனைத்து பிரச்சினைகளயும் குறிக்கும் இடமாகும்.

ஜோதிட சாஸ்த்திரப்படி, 6 ம் இடம் என்பது, வியாதி, எதிரி, பகை, கடன், வம்பு, விரோதம், எதிரிகளால் ஏற்படும் தொல்லைகள், சட்டப் பிரச்சினை போன்ற வேண்டாத அசுப பலன்களை குறிக்கும்.

கையில் காசு தங்காது, வருமானம் குறையும், சேமிப்பும் கரையும், பணப்பிரச்சினை தலைக்கு மேல் வரும். செலவுகளை குறைக்கவும்.

உடல் நலத்தில் மிகுந்த அக்கரை தேவை. மருத்துவரை அனுகி வழக்கமான பரிசோதனைகள் செய்வதுடன், உணவு பழக்க வழக்கங்கள் கட்டுப்பாடுடன் இருப்பது நல்லது.

வேலை செய்வோர்களுக்கு எந்த வித பிரச்சினையும் இருக்காது, ஆனால் செய்யும் வேலையில் ஆர்வம் குறைவதுடன், மேல் அதிகாரிகளிடமும், நல்ல பேரும் கிடைக்காது. அதிக பணிச்சுமையால் உடல் சோர்வு மற்றும் மனச்சோர்வு உண்டாகலாம்.

தொழில் செய்பவர்கள், புதிய முயற்சிகளில் ஈடுபடுவதை தவிர்க்கவும். கடன் வாங்குவது என்பது முற்றிலும் ஆகாது. பொருளும், முதலீடும் நஷ்டம் வராமல் பார்த்துக் கொள்ளவும். கடன் - வட்டி சுமை அதிகரிக்கலாம். கடின உழைப்பும், தொழிலில் முழு கவனமும் தேவை. கடனால் அவமானம், கொடுக்கல் - வாங்கல் சிக்கல், அதனால் பல வித மனக்கசப்பு வரலாம். தங்களின் விரோதப் போக்கால் சுற்றியுள்ள அனைவரின் பகைக்கு ஆளாக நேரிடும்.

கல்வி பயலுபவர்கள், படிப்பில் அதிக நாட்டம் தேவை, தீய நட்பால் கவனம் சிதறுவதுடன் பெயரும் கெடலாம்.

மனதில் ஒரு வித அச்சமும், சோக உணர்வும், கவலையும் தோன்றும், அதே சமயம் மகர ராசிக்கே உண்டான போராடும் குணத்தால் சமாளித்து வென்றும் வரலாம்.

இந்த 1 ஆண்டில் பொறுமை, சகிப்புத்தன்மை, சுய கட்டுப்பாடு மற்றும் நிதானமான செயல்பாடுகள் மிக முக்கியம்.

## கும்பம்: (அவிட்டம் 3,4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1,2,3ம் பாதம்)

கும்ப ராசி அன்பர்களுக்கு, குரு பகவான் தங்கள் ராசிக்கு, **5 ம்** இடத்திற்க்கு வருகிறார். இது மிக சிறப்பான இடமாக கருதப்படுகிறது. **இது குரு பலம் ஆகும்.**

5ம் இடத்து குரு கெஞ்சினாலும் கிடைக்காது என்பர். எதிர்பாரத நன்மைகள் தருவதோடு, குல தெய்வ அனுக்கிரகமும் கிடைக்கும்.
கடந்த **5** ஆண்டு **7 ½ சனியில் - ஜென்ம சனியில்** சிக்கி தவிக்கும் உங்களுக்கு இந்த குரு பெயர்ச்சி, மிகுந்த ஆறுதலான விஷயமாக இருக்கும். கடந்த காலம் இருந்த கஷ்டங்களும், துன்பங்களும், கவலைகளும், பிரச்சினைகளும் படி படியாக குறையும்.
தடை பட்ட திருமணம் கை கூடும், புத்திர பாக்கியம் தாமதமான தம்பதிகளுக்கு தற்போது கிடைக்கும். நினைத்தவை கைகூடும்.
கல்வி பயிலும் மாணவர்களுக்கு மிக நல்ல காலம். உங்களின் தனித்திறமைகள் வெளிபடும் மற்றும் போட்டித் தேர்வுகளில் வெற்றி பெறுவதுடன் நல்ல மதிப்பெண்கள் வரும் வாய்ப்புகளும் கிடைக்கும்.
குரு லாப ஸ்தானத்தை பார்ப்பதால், அனைத்து வகையிலும் பணம் சேரும். ஆடை, பொன் - ஆபரணங்கள், ஆடம்பர பொருட்கள் சேரும். புது வீடு வாங்கி அல்லது கட்டி குடி போக வாய்ப்பு வரும். நீங்கள் நினைத்த உயர் ரக வாகனம் வாங்க வாய்ப்பு வரும்.

குடும்பத்தில் சந்தோஷம் பெருகும். எதிர்பாராத அதிர்ஷ்டங்கள் வந்து கதவை தட்டும். தொட்டது பொன்னாகும்.
வேலையில் இருப்பவர்களுக்கு, ஊதிய உயர்வு, பதவி உயர்வு, பாராட்டு, அங்கீகாரம் போன்ற நற்பலன்கள் கிடைக்கும்.
சுய தொழில் செய்பவர்களுக்கு பெருத்த முன்னேற்றம் தரும்.

கலை, இலக்கியம், சினிமா, இசை போன்ற கலைத்துறைகளில் இருப்பவர்களுக்கு, ஏற்றமான காலமிது.
பங்குச் சந்தை, நிலம் அல்லது பிற முதலீடுகளில் எதிர்பாராத லாபம் ஈட்ட வாய்ப்பு உண்டு. திடீர் செல்வம் வரும்.
வாழ்க்கையில் முன்னேற துடிப்பவர்களுக்கு, வாய்ப்புகள் தேடி வரும்.

மகிழ்ச்சியான தருணங்கள், சந்தோஷம் தரும் நிகழ்வுகள், குதூகலம், சுகபோகங்கள், சுகமான பொழுது போக்குகளால் மனம் மிதக்கும்.

## மீனம்: (பூரட்டாதி 4ம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி)

மீன ராசி அன்பர்களுக்கு, குரு பகவான் தங்கள் ராசிக்கு, 4 ம் இடத்திற்க்கு வருகிறார். இது கடந்த ஆண்டு இருந்ததை விட சற்று நல்ல இடமாகும். தற்போது **7 ½ சனியில்** - **விரய சனியில்** தவிக்கும் உங்களுக்கு, இந்த குரு பெயர்ச்சி சற்று ஆறுதல்கள் தரும். இந்த குரு பெயர்ச்சி, நல்லதும் - கெட்டதும் கலந்தவையாவே இருக்கும். கடந்த காலம் இருந்த துன்பங்களும், கவலைகளும் சற்றே குறையும்.

4-வது இடம் "சுகஸ்தானம்" என்று அழைக்கப்படுகிறது, இது தாய், வீடு, வாகனம், உயர்கல்வி, சொத்து, சுகம், சந்தோஷம், வீட்டில் கிடைக்கும் சுக சௌகரியங்கள் மற்றும் மன அமைதியை குறிக்கும்.
தாயின் நலம் கெடலாம் அல்லது தாய், தாய் வழி உறவு பகை ஆகலாம். செய்தொழிலில் பெரிய ஆதாயம் இருக்காது.
வாகனம் அவ்வப்போது பழுது ஆகி வீண் செலவு வைக்கும், புதிய வாகனம் வாங்கும் வாய்ப்பு கிடைக்கும். வீட்டு உபயோகப் பொருட்கள் அடிக்கடி பழுது அடைந்து செலவு வைக்கலாம். வீட்டுக்குள் குழப்பம் மற்றும் அமைதி குலையும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் ஏற்படக்கூடும்.

சொத்து வாங்கும் முயற்சிகளில் தாமதம்/தடை ஏற்பட்டு, பின் வாங்கும் அமைப்பு சிலருக்கு கிடைக்கும். எதிர்பாராத சொத்துப் பிரச்சனைகளுக்கு தீர்வும் காணப்படலாம்.
வீடு மாறும் சூழ்நிலை உருவாகலாம் - சிலருக்கு சொந்த ஊர் விட்டு வேலை- தொழில் ரீதியாக வெளியூர் செல்ல வேண்டி இருக்கும்.
சிலருக்கு உயர்கல்விக்கான முயற்சிகள் தாமதத்துடன் சாதகமாக முடிவடையலாம். சிலர் வெளியூர் சென்று படிக்க வேண்டி வரும்.

குரு 10 வது இடத்தை பார்வையிடுவதால், உயர் பதவிகள், மற்றும் வேலை வளர்ச்சி, நல்ல வேலை மாற்றம் ஏற்படலாம் சிலருக்கு, தொழிலில் வெற்றியை தரலாம். வருமானம் மற்றும் பணப்பிரச்சினை என்பது இருக்காது, இருந்தபோதிலும் மனதில், ஒரு தெம்பும், பிடிப்பும் இருக்காது. மனஉளைச்சல் அதிகமாகும்;

உழைத்த உழைப்புக்கு ஏற்ற பலன் இல்லையே என்கிற வேதனையுடன், நல்லதொரு மாற்றத்தை நோக்கி மனம் தவிக்கும்

## பரிகாரம் செய்து கொள்ள வேண்டிய ராசிகள்:

**மேஷம், மிதுனம், கடகம், கன்னி, விருச்சிகம், மகரம், மீனம்**

### குரு கிரகத்துக்குரிய பரிகாரங்கள்:

1. வாரந்தோறும் வியாழக் கிழமைகளில், தட்சிணாமூர்த்திக்கு கொண்டைக் கடலை மாலை சாற்றி நெய் தீபம் ஏற்றி வழிபடவும்.
2. குரு காயத்திரி மந்திரமான

   "ஓம் வ்ருஜபத் வஜாய வித்மஹே
   க்ருணி ஹஸ்தாய தீமஹி
   தந்நோ குரு ப்ரசோதயாத்"

   இதை காலையில் மாலையில் 9 முறை படிக்கவும்.
3. கும்பகோணம் - " ஆலங்குடி – குரு பகவான் " கோவில் சென்று அங்குள்ள தட்சிணாமூர்த்திக்கு 24 நெய் தீபம் ஏற்றி அர்ச்சனை செய்து வணங்கி வரவும்.
4. " திருச்செந்தூர் " சென்று சமுத்திரத்தில் நீராடி விட்டு முருகனை வழிபட்டு அர்ச்சனை செய்து வந்தால் குருவினால் உண்டான சகல தோஷங்களும் நிவர்த்தியாகும்.

5. சென்னை - போரூர் அருகே " ஸ்ரீ ராமநாதேஸ்வரர்" கோவில் சென்று அங்குள்ள தட்சிணாமூர்த்தியை வழிபட்டு வரவும்.

6. சென்னை - பாடி அருகே " திருவல்லிதாயம் " என்கிற "ஸ்ரீ வல்லீஸ்வரர் ஆலயம்" வியாழக்கிழமைகளில் சென்று இங்குள்ள குருபகவானுக்கு மஞ்சள் வஸ்திரம், கொண்டைக்கடலை மாலை அணிவித்து வழிபடவும்.

**குரு பகவான், தங்கள் - தங்கள் குடுபத்தினருக்கும் எல்லா விதத்திலும் நன்மைகளை தர இறைவன் அருள்புரிவாராக...**

**May Lord GURU Bhagvan give Blessings, all Good and Great things to you and your family.**

***By – Jagdish Astrologer***

**(Cell: 9884292394)**

www.jagdishastrologer.com

**********